## உடன்பாட்டு சம்மதத்தின் பொருள் விளக்கம்

உடன்பாட்டு சம்மதம் என்பது, பாலியல் செயல்பாட்டில் ஈடுபடுவதற்கு, பங்கேற்பவர்கள் அனைவரிடத்திலும் ஒரு அறிதல், தன்னிச்சையான, மற்றும் பரஸ்பர முடிவு இருப்பது ஆகும். அந்த பாலியல் செயல்பாட்டில் ஈடுபடுவதற்கான விருப்பம் தொடர்பான தெளிவான அனுமதியை அந்த வார்த்தைகள் அல்லது செயல்பாடுகள் உருவாக்கும் காலம் வரையில், சம்மதமானது வார்த்தைகளால் அல்லது செயல்பாடுகளால் தரப்பட முடியும். அமைதி அல்லது எதிர்க்காமல் இருப்பது, ஆகியவற்றை மட்டுமே பார்ப்பது, சம்மதத்தை நிரூபிப்பதில்லை. சம்மதத்தின் பொருள் விளக்கம் என்பது பங்கேற்பாளர் ஒருவரின் பாலினம், பாலின நாட்டம், பாலின அடையாளம், அல்லது பாலின வெளிப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மாறுவதில்லை.

எந்த ஒரு பாலியல் செயல்பாட்டிற்கான சம்மதம் அல்லது பொது இசைவின்படி அவர்களுக்குள் அல்லது எந்த ஒரு நபருடனும் நடத்த முந்தைய பாலியல் செயல்பாடு ஆனது, பிற பாலியல் செயல்படு எதற்குமான சம்மதமாக இருப்பது அவசியமில்லை.

அந்த செயல்பட்டைத் துவக்குகின்ற நபர் போதை மருந்துகளின் மற்றும் /அல்லது மதுபானத்தின் தாக்கத்தின் கீழ் இருந்தாரா அல்லது இல்லையா என்பது பற்றி பொருட்படுத்தாமல் சம்மதம் தேவைப்படுகிறது.

சம்மதம் ஆரம்பத்தில் தரப்பட்டு இருக்கலாம் ஆனால் எந்த நேரத்திலும் அது விலக்கப்படலாம்.

பாலியல் செயல்பாட்டில் பங்கேற்பதை அறிந்தே தேர்வு செய்வதற்கான திறன் இல்லாதவராக இருக்கும் பொழுது அந்த நபர் இயலாதவராக இருக்கிறார், அப்பொழுது, சம்மதம் தரப்பட முடியாது. இயலாமல் இருப்பது என்பது, சுயஉணர்வு இல்லாமல் இருப்பதால் அல்லது உறங்கிக் கொண்டு இருப்பதால், தானாகச் செய்ய விரும்பாத அளவில் கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதால், அல்லது ஒரு நபர் மற்றபடி சம்மதிக்க முடியாதவராக இருப்பதால் நேரலாம். போதையின் அளவைச் சார்ந்து, மது, போதை மருந்துகள், அல்லது பிற போதைப் பொருட்கள் ஆகியவற்றின் தாக்கத்தின் கீழ் உள்ள ஒருவர் இயலாதவராக இருக்கலாம் மற்றும் எனவே அவரால் சம்மதிக்க இயலாது.

ஏதேனும் வலுக்கட்டாயம், அச்சுறுத்தல், பலப்பிரயோகம், அல்லது துன்புறுத்தப் போவதாக மிரட்டல் போன்றவற்றின் விளைவாக சம்மதம் தரப்பட முடியாது.

சம்மதம் விலக்கிக் கொள்ளப்படும் பொழுது அல்லது அதற்கு மேல் தரப்பட முடியாது என்றால், பாலியல் செயல்பாட்டைக் கண்டிப்பாக நிறுத்த வேண்டும்.

## போதை மருந்து மற்றும் மதுபானம் பயன்படுத்திய பொழுது நடந்து கொண்ட குற்றச்சாட்டுகளுக்கான பொது மன்னிப்பு

Rockland Community College ல் உள்ள ஒவ்வொரு மாணவரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு உச்சஅளவில் முக்கியமானது ஆகும். RCC ஆனது குடும்ப வன்முறையோ, டேட்டிங் வன்முறையோ, பின்தொடர்வதோ, அல்லது பாலியல் தாக்குதலோ இவை உட்பட ஆனால் இவற்றுக்குள் கட்டுப்படாத, அந்த வன்முறை நேர்கின்ற சமயத்தில் மதுபானம் அருந்திக் கொண்டிருக்கும் மற்றும் /அல்லது போதை மருந்துகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் (அத்தகைய பயன்பாடு தன்னிச்சையாகவோ அல்லது தானாகச் செய்ய விரும்பாமலோ இருக்கலாம்) பொழுது, தங்களது சொந்த நடத்தையின் சாத்தியமான விளைவுகளின் அச்சத்தின் காரணமாக, அத்தகைய சம்பவங்கள் பற்றி புகார் செய்யத் தயங்கும் அந்த மாணவர்களை அடையாளம் கண்டு கொள்கிறது. RCC ஆனது குடும்ப வன்முறை, டேட்டிங் வன்முறை, பின்தொடர்வது அல்லது பாலியல் தாக்குதல் ஆகியவை குறித்து, நிறுவன அதிகாரிகளிடம் புகார் செய்வதற்கு, வலிமையாக ஊக்குவிக்கிறது. நன்னம்பிக்கையின் பேரில் செயல்படும் பக்கத்தில் நிற்பவர் அல்லது நன்னம்பிக்கையின் பேரில் செயல்படும் புகார் செய்பவர், RCC யின் அதிகாரிகள் அல்லது சட்ட

அமலாக்கத்தினரிடம், குடும்ப வன்முறை, டேட்டிங் வன்முறை, பின்தொடர்வது அல்லது பாலியல் தாக்குதல் ஆகியவை பற்றிய ஏதேனும் சம்பவத்தை வெளிப்படுத்தினால், அவர்கள், குடும்ப வன்முறை, டேட்டிங் வன்முறை, பின்தொடர்வது அல்லது பாலியல் தாக்குதல் நடைபெற்ற இடத்தின் அல்லது தொடங்கிய நேரத்தின் பொழுது, மதுபானம் மற்றும் /அல்லது போதை மருந்து பயன்பாட்டின் கொள்கைகளுக்கான RCC's யின் நடத்தை விதிக்கு ஆட்பட மாட்டார்கள்.

## மாணவரின் உரிமைகள் சட்டம்

மாணவர்கள் அனைவருக்கும் உள்ள உரிமை:

உள்ளூர் சட்ட அமலாக்கத்தினர் மற்றும் /அல்லது மாநிலக் காவல் துறையினருக்கு அறிக்கை ஒன்றை அளிப்பது;

குடும்ப வன்முறை, டேட்டிங் வன்முறை, பின்தொடர்தல், மற்றும் பாலியல் தாக்குதல் பற்றி தெரிவிப்பவர்கள் தீவிரமாக நடத்தப்படுவது;

நிறுவனத்தின் அழுத்தம் எதுவும் இல்லாமல், குற்றம் ஒன்றை அல்லது மீறலை வெளிப்படுத்துவதா அல்லது வேண்டாமா மற்றும் நீதி சம்பந்தமான அல்லது நடத்தைச் செயல்முறையில் மற்றும் /அல்லது குற்றத்திற்கான நீதிச்

செயல்முறையில் பங்கேற்பது என்பது பற்றிய ஒரு முடிவை எடுப்பது;

ஒரு நியாயமான, பாரபட்சமற்ற, மற்றும் போதுமான முன்அறிவிப்பு அளிக்கும் மற்றும் கேட்கப்படுவதற்கான ஒரு அர்த்தமுள்ள வாய்ப்பை அளிக்கும் செயல்முறையில் பங்கேற்பது;

கண்ணியத்துடன் நடத்தப்படுவது மற்றும் நிறுவனத்தில் இருந்து மரியாதையுடனான, நியாயமான, மற்றும் மதிப்பு மிக்க ஆரோக்கியக் கவனிப்பு மற்றும் ஆலோசனை சேவைகளை, கிடைக்கின்ற இடத்தில் பெறுவது;

இந்த குற்றங்கள் மற்றும் மீறல்கள் நடைபெற்ற பொழுது, புகார் தெரிவிக்கும் நபர் மீது தான் குற்றம் இருக்கிறது, அல்லது இத்தகைய குற்றங்கள் அல்லது மீறல்களைத் தவிர்ப்பதற்கு அவர் ஒரு வித்தியாசமான முறையில் செயல்பட்டிருக்க வேண்டும் என்பது போன்ற பரிந்துரை எதுவும் இல்லாதிருப்பது;

ஒரு சில நிறுவனப் பிரதிநிதிகளிடம் அந்த நிகழ்வு பற்றி சாத்தியமான அளவில் விவரிப்பது மற்றும் அந்த சம்பவத்தை மீண்டும் ஒரு முறை விளக்க அவசியம் இல்லாதிருப்பது.

அந்த நிறுவனத்திடம் இருந்து, மாணாக்கர் எவரிடமிருந்தும், குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து மற்றும் /அல்லது எதிர்வாதியிடம் இருந்து, மற்றும் /அல்லது அவர்களது நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் அந்த நிறுவனத்தின் சட்ட எல்லைக்குள் பழகியவர்கள் ஆகியோரின் எதிர்த்தாக்குதலில் இருந்து பாதுகாக்கப்படுவது;

ஒரு தீர்மானத்தின் அப்பீலைக் குறைந்த பட்சம் ஒரு தடவை அணுகுவது;

தனது தேர்வின்படி ஆலோசகர் ஒருவர் துணைக்கு வருவது, அவர் புகார் தெரிவிக்கும் நபருக்கு, அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கு, அல்லது எதிர்வாதிக்கு, நீதி சம்பந்தமான அல்லது நடத்தைச் செயல்முறையில், அந்த செயல்முறை தொடர்பான சந்திப்புகள் மற்றும் விசாரனைகள் தொடர்பானவை உட்பட்டவற்றுக்கு துணை புரியலாம் மற்றும் ஆலோசனை வழங்கலாம்;

நிறுவனத்தின் ஆராய்வு, குற்ற நீதி, அல்லது நீதி சம்பந்தமான அல்லது நடத்தைச் செயல்முறை ஆகியவற்றின் குறுக்கீடு இல்லாமல் குடிமை உரிமைகளைப் பயன்படுத்துவது மற்றும் மதத்தைப் பின்பற்றுவது.

இனம், நிறம், தேசியப் பூர்வீகம், மதம், நம்பிக்கைக்கூற்று, வயது, செயல்திறன் இல்லாமை, பாலினம், பாலின அடையாளம் அல்லது வெளிப்பாடு, பாலியல் நாட்டம், குடும்ப நிலை, கர்ப்பம், மரபியல் குணாதிசயங்களுக்கு முற்சார்பு, இராணுவ நிலை, குடும்ப வன்முறைக்குப் பாதிக்கப்பட்டவர் நிலை அல்லது குற்றத்திற்குத் தண்டிக்கப்படுதல் மற்றும் அந்த குற்றம் அல்லது மீறல் பள்ளி வளாகத்தில் அல்லது வெளியே நடைபெற்றதா அல்லது வெளிநாட்டில் படித்துக் கொண்டிருந்த பொழுது நடைபெற்றதா என்பது பற்றி கருதாமல், உரிமைகள் பொருந்துகின்றன

பல்கலைக்கழகக் காவல்துறையினர் அல்லது வளாகப் பாதுகாப்பினர், உள்ளூர் சட்ட அமலாக்கத்தினர் மற்றும் /அல்லது மாநிலக் காவல்துறையினர் ஆகியோரிடம் புகார் செய்வதற்கான உரிமை அல்லது புகார் செய்யாமல் இருப்பதற்கான உரிமை; அந்த சம்பவத்தை உங்களது நிறுவனத்திற்கு தெரிவிப்பதற்கு; சம்பவத்தை புகார் செய்ததற்காக எதிர்த்தாக்குதலில் இருந்து நிறுவனத்தால் நீங்கள் பாதுகாக்கப்படுவதற்கு; மற்றும் உங்கள் நிறுவனத்திடம் இருந்து உதவி மற்றும் ஆதாரவளங்கள் பெறுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது.